**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருப்புவனம்**
**முன்னிலை – திரு.R.வெங்கடேஷ் பிரசாந்த், B.A.,B.L.(Hons),**
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், திருப்புவனம்**
**2026 ம் ஆண்டு ஜீலை மாதம் 02–ம் நாள் வியாழக்கிழமை**
**Crl.M.P. No. – 271/2026**

கவியரசு

த/பெ.பாலமுருகன் .....மனுதாரர் /வாகன உரிமையாளர்

**–எதிர்–**

அரசுக்காக காவல் ஆய்வாளர்

திருப்பாச்சேத்தி காவல் நிலையம்

குற்ற எண்.120/2026 ......எதிர்மனுதாரர்/குற்றமுறையீட்டாளர்

இம்மனு என் முன்னிலையில் இன்று 02.07.2026ம் தேதி விசாரணைக்காக வந்த போது மனுதாரருக்காக கற்றறிந்த வழக்கறிஞர் திரு.R.சத்தியேந்திரன் அவர்கள் ஆஜராகியும், அரசு வழக்கறிஞர் நிலை–1 திரு.R.திலகராணி அவர்கள் எதிர்மனுதாரருக்காக ஆஜராகியும் இருதரப்பு வாதங்களையும் கேட்டு இன்று இந்நீதிமன்ற வழங்கும்

**<u>உத்தரவு</u>**

1) மனுதாரர் வழக்கு சொத்தின் உரிமையாளர் ஆவார். மனுதாரர் வண்டியான TN 63 CC 4543 pulsar Chasis Number:MD2A13EX7TCK69103, Engine Number:DKXCTK20672 என்ற பதிவெண் கொண்ட வண்டி மீது குற்ற எண்.120/2026 பிரிவு 191(2), 191(3), 296(b), 115(2), 109(1), 351(3) of BNSன் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டு நிலுவையில் உள்ளதாகவும் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது. அசல் RC Book மனுதாரர் வசம் உள்ளது. மேற்படி வாகனத்தை இடைக்கால பொறுப்பில் மனுதாரரிடம் ஒப்படைக்கக் கோரி பிரிவு 498 மற்றும் 503– BNSSன் படி மனுதாரரால் மனுத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. இது குறித்து அரசு தரப்பு வழக்கறிஞருக்கும், காவல்துறையினருக்கும் அறிவிப்பு அனுப்பப்பட்டு பதில் பெறப்பட்டது. அந்த பதிலுரையில் வழக்கின் சொத்தை மனுதாரரிடம் ஒப்படைக்க ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டது. மேற்படி வழக்கு சொத்தை காவல்துறையினர் நீதிமன்றத்தில் சமர்பித்து **P.R.No.76/2026** என பதிவு செய்து, நீதிமன்ற பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளது.

3. இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய விசயம் இம்மனு அனுமதிக்கத்தகக்கதா? இல்லையா ? என்பதேயாகும்.

4. இருதரப்பும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது. மனுதாரர் தரப்பில் மேற்படி வழக்கு சொத்துக்கள் வாதியின் காவல் நிலையத்தில் தொடர்ந்து இருந்து வந்தால் அதன் மதிப்பு குறைந்துவிடும் என்றும், தனக்கு கஷ்ட, நஷ்டம் ஏற்படும் என்றும் வாதிடப்பட்டதை கருத்தில் கொண்டும், வழக்கின் சூழ்நிலையை கருத்தில் கொண்டும், கீழ்க்கண்ட நிபந்தனைகளின் அடிப்படையில் வழக்கு சொத்தை மனுதாரர் வசம் இடைக்காலமாக ஒப்படைக்க உத்தரவிடப்படுகிறது.

1. மனுதாரர் ரூ.50,000/-ஐ -க்கு ஒரு பிணை ஆவணம் மனுதாரரே சொந்த பிணையில் எழுதிக் கொடுக்க வேண்டும் மேலும் ஒரு ஜாமீன்தாருடன் மேற்படி தொகைக்கு பிணை ஆவணம் எழுதிக்கொடுக்க வேண்டும்.

2. வழக்கு சொத்துக்களின் புகைப்படங்கள் இந்நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

3. மனுதாரர் மற்றும் வழக்கறிஞர் முன்னிலையில் பஞ்சநாமா தயார் செய்ய வேண்டும் என்றும், அதில் வழக்கறிஞர் மற்றும் மனுதாரர் கையொப்பம் செய்ய வேண்டும்.

4. மனுதாரர் மனுவில் கண்ட சொத்தை விற்கவோ, மாற்றவோ கூடாது.

5. இந்நீதிமன்ற விசாரணையின் போது, நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த வேண்டும் என்ற நிபந்தனையுடன் இம்மனு அனுமதிக்கப்பட்டு உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2026ம் ஆண்டு ஜுலை திங்கள் 02-ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறிய பகரப்பட்டது.

VENKADESHPRASANTH Digitally signed by VENKADESHPRASANTH Date: 2026.07.02 18:35:10 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், திருப்புவனம்.